
Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ்Mirror

FRIDAY, NOVEMBER 15 2024



ஒருவன் ஆயிரம் பேர் கொண்ட ஆயிரம் படைகளை வெற்றிக்கொள்கின்றான்; மற்றொருவர் தன்னைத் தானே அடக்கி வெல்கிறான்; இவர்களுள் தன்னை வென்றவனே வெற்றி வீரருள் முதன்மையானவன். (தர்ம போதனை)

வெள்ளிக்கிழமை நவம்பர் 15, 2024 | ஒளி: 10 கதிர் 094 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

10 ஆவது பாராளுமன்ற தேர்தலில்

# அனுர அலை



இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்திற்கான வாக்களிப்பு, வியாழக்கிழமை 14ஆம் திகதி மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றது.

பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிவாகும் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 8,352 வேட்பாளர்கள் களமிறங்கி இருந்தனர். இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சேர்ந்த 5,006 வேட்பாளர்களும் 3,346 சுயேச்சைக் குழு வேட்பாளர்களும் போட்டனர். 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

நாடு முழுவதும் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 160 தொகுதிகளில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையில் வாக்களிப்புகள் இடம்பெற்றன.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கை ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடைபெற்றது. இந்தக் காலப்பகுதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்ததுடன், அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. இதற்கமைய 690 குழுக்கள் தேர்தல் களத்தில் போட்டியிடத் தகுதி பெற்றன. இந்த குழுக்களின் சார்பாக நாடு முழுவதும் 8352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

எனினும், ஒருசில இடங்களில், சிறுசிறு சம்பவங்களை தவிர, மிகவும் சுமூகமான முறையில், வாக்களிப்புகள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றன.

இந்நிலையில், இந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்தமாக 65 சதவீதம் வாக்களிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைய தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மதிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 79 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தது. இந்நிலையில், 2024 பொதுத் தேர்தல் வாக்களிப்பு பாரிய வீழ்ச்சியைக் குறிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது உத்தியோகபூர்வ பெறுபேறு, வியாழக்கிழமை (14) இரவு 9 மணிக்கு முன்னதாகவே வெளியானது. முதலில் தபால் மூல வாக்களிப்பு பெறுபேறுகளும். இடையிலேயே தொகுதி பெறுபேறுகளும் வெளியாகின. அதிகாலை வரையிலான பெறுபேறுகளின் பிரகாரம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அலையே கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. எந்த திசைகளாக இருந்தாலும் திசைக்காட்டியே வெற்றிப்பெற்றுக்கொண்டிருந்தது.



## “ஒன்றிணைக்கும் ஆட்சி அமையும்”

தேசிய மக்கள் சக்தி வடக்கு,கிழக்கு,தெற்கு,மேற்கை ஒன்றிணைக்கும் ஆட்சியை அமைக்கும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதிபட கூறினார்.

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலில், மருதானை பஞ்சிகாவத்த அபயசிங்காராமவில் தனது வாக்கை, வியாழக்கிழமை (14) அளித்தார்.

வாக்களித்த பின்பு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தி வலுவான பாராளுமன்றத்தை அமைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். தொடர்ச்சி P2

## விருப்பு வாக்கை படம் பிடித்தவர் கைது

வாக்களிப்பு நிலையத்தில் தனது விருப்பத்தை உறுதிப்படுத்திய பின்னர் அதனை புகைப்படம் எடுத்த ஒருவர் ஆலங்குடா முஸ்லிம் கல்லூரியின் மண்டபம் இலக்கம் 1 வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது கைத்தொலைபேசியை கைப்பற்றியுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட நிலைய பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஆலங்குடாவ பெய்தல பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்களிப்பு நிலையங்களில் சோகமான சம்பவங்கள் பதிவு

எம்.றொசாந்த்



10ஆவது பாராளும ன்றத்துக்கான வாக்களிப்பு, வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது. இந்நிலையில், மூன்று வாக்களிப்பு நிலையங்களில் சோகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொபேகனே, பனாம முஸ்லிம் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கழிவறைக்குள் உயிரிழந்து ள்ளதுடன் அவரது சடலம், வியாழக்கிழமை (14) காலை மீட்கப்ப ட்டுள்ளது.

மாவத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த, விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளராக கடமையாற்றிய ஏ.எம்.அஸீம் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று முதற்கட்ட நீதவான் விசாரணைகளை மேற்கொண்ட நிக்கவெரட்டிய நீதவான் சந்தன லியனகே சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நிக்கவெரட்டிய ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். தொடர்ச்சி P2





## ரணில் வாக்களித்தார்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2024 பொதுத் தேர்தலில் தனது வாக்கை, கொழும்பில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் அளித்தார்.

## “சந்தர்ப்பம் கிட்டட்டும்”



2024 பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை ஆரம்பமானது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவருமான சஜித் பிரேமதாச ராஜகிரிய, தொடர்ச்சி P2

## சிறுவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் விபத்து: ஒருவர் பலி

மஹியங்கனை, பகரகம்மன பகுதியில் வியாழக்கிழமை (14) பிற்பகல் 15 வயது சிறுவன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள், ஆட்டோவுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்டோவில் பயணித்ததாக கூறப்படும் தம்பகொல்ல, மாபகதேவாவ, மஹியங்கனை பகுதியை சேர்ந்த 60 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

## வாக்குச் சீட்டைக் கிழித்தவர் கைது

வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து வாக்குச் சீட்டைக் கிழித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் வாதுவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

## வாக்காளர்களுக்கு பணம் வழங்கியவர் கைது

பொதுத் தேர்தல் வேட்பாளர் ஒருவர் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்கு வாக்களிப்பு தினமான வியாழக்கிழமை (14) பணம் விநியோகம் செய்து கொண்டிருந்த போது கற்பிட்டி அல்மனார் முகாமுக்கு அருகில் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வேட்பாளரிடம் ஏற்கனவே 97,200 ரூபாய் பணம் இருந்ததுடன், அந்தப் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 106 வயது முதியவர் வாக்களிப்பு

எஸ்.கீதபொன்கலன்

106 வயது முதியவர் யோன் பிலிப் லூயிஸ் பாராளுமன்றத்தேர்தலுக்கான தமது வாக்கை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடியில் வியாழக்கிழமை(14) செலுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் 18.11.1918 இல் தாம் பிறந்து,தமது 22 வயதில் திருகோணமலைமலைக்கு வந்து தொடர்நது இங்கே வாழ்ந்து வருவதாகவும்,இலங்கையின் பாராளுமன்ற தேர்தல்கள் அனைத்திலும் தாம் வாக்களித்துள்ளதாகவும் அவர் கூறினார்.



PAGE 1 தொடர்ச்சிகள்





# “ஒன்றிணைக்கும் ஆட்சி அமையும்”

மக்களுக்கு ஏற்புடையதான சட்டங்களை நிறைவேற்றி, புதிய பாராளுமன்ற கலாசாரத்தை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வெற்றியின் பின்னர் நாட்டில் காணப்பட்ட ஜனநாயக ரீதியிலான சுதந்திரத்தை இனிவரும் தேர்தல் காலங்களிலும் எதிர்பார்ப்பதாகவும், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மக்கள் அதை உணர்ந்துள்ளனர் என்றும் அதனையே இந்நாட்டின் தேர்தல் கலாசாரமாக மாற்ற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# யாழில் பலத்த பாதுகாப்பு



பாராளுமன்றத் தேர்தலின் வாக்குகள் எண்ணும் பணி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வன்முறைகளை தடுப்பதற்காக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அதி தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கலகத் தடுப்பு பொலிஸாரும் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# “சந்தர்ப்பம் கிட்டட்டும்”



கொடுவேகொட விவேகாராம விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டிடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், பொதுத் தேர்தல் ஜனநாயக மற்றும் அமைதி முறையான, மக்களின் உரிமைகளை முதன்மைப்படுத்தும் சுதந்திரமான தேர்தலாக அமையட்டும். சுதந்திரமாக மக்கள் தங்கள் கருத்துகளையும் விருப்பங்களையும் தெரிவிக்க சந்தர்ப்பம் கிட்டட்டும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வீழ்ச்சி கண்டு அதளபாதாலத்துக்குக்குள் இருக்கும் தேசத்தை, வங்குரோத்து அடைந்துள்ள நாட்டை இந்த பாதாளத்தில் இருந்து மீட்க அனைவரும் கைகோர்த்து, நாட்டின் மீட்சிக்கு 220 இலட்சம் மக்களும் பங்களிக்குமாறும் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

# மாத்தளை விபத்தில் மூவர் பலி

தம்புள்ளை - மஹியங்கனை வீதியில் தனியார் பேருந்து ஒன்றும் வேனும் மோதிக்கொண்டதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் 39 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேனுடன் மோதியதில் பஸ் பள்ளத்தில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் பேருந்தில் பயணித்த 37 பேரும் வேனில் பயணித்த ஐந்து பேரும் காயமடைந்து வில்கமுவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வாக்களிப்பு நிலையங்களில் சோகமான சம்பவங்கள் பதிவு

பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த குணவர்தன மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ஜயமின குமார ஆகியோரின் பணிப்புரைக்கமைய சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொபேகனே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதய குமார மேற்கொண்டு வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவ.ர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த 34 வயதுடைய சுபாஷ் எனும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் புதன்கிழமை (13) முதல் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த நபர் வியாழக்கிழமை (14) காலை உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அதனையடுத்து சடலத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் , போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளதுடன் , சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச் சம்பவத்தினால் வாக்களிப்பு நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதுடன் , பிறிதொரு பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்கு அமர்த்தப்பட்டு , வாக்களிப்பு சுமூகமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெண் அதிகாரி மரணம்

கெஸ்பேவ, பொல்ஹேன பகுதியில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில், அதிகாரியாக கடமையாற்றிய பெண்ணொருவர் திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலக்கம் 33B, பயாகல இந்துருவாகொடவில் வசிக்கும் லியனகே சாமிகா ருவானி லியனகே என்ற (48) வயதுடைய திருமணமாகாத பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு அளுத்கடே மேல் நீதிமன்றில் வேலைத்திட்ட உதவி நீதிபதியாக கடமையாற்றும் இப்பெண் புதன்கிழமை (13) காலை கெஸ்பேவ பொல்ஹேன மடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிலையில். புதன்கிழமை இரவு 7.40 மணியளவில் ஒரு அறையில் தங்கியிருந்தபோது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை சிகிச்சைக்காக பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எனினும், இச்சம்பவத்தால் வாக்குச்சாவடி பணிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறுவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் விபத்து...

மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பகொல்ல மற்றும் மாபகதேவ பகுதியை சேர்ந்தவர்கள் என கூறப்படும் இருவரே காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் ஒருவர் 20 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது 15 வயதுடைய சிறுவனே மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றதாகவும் இருவரும் மஹியங்கனை வைத்தியசாலையின் 8 ஆம் இலக்க வார்டில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

**“ உயிரிழந்தவரின் சடலம் மஹியங்கனை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது**

உயிரிழந்தவரின் சடலம் மஹியங்கனை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மஹியங்கனை பொலிஸார் மேலதி விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வாக்குச் சீட்டைக் கிழித்தவர் கைது

சந்தேக நபர் வாக்களிப்பதற்காக பொத்துப்பிட்டிய பூஜாராமய விகாரஸ்தானத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு முற்பகல் 11 மணியளவில் வந்துள்ளார்.

வாக்களித்த பின்னர் பிரபல அரசியல் கட்சி ஒன்றின் குழு தலைவரின் விருப்பு இலக்கம் ஊழியர்களிடம் கேட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அந்த எண்ணை தெரிவிக்க அதிகாரிகள் தயக்கம் காட்டியதால் குறிக்கப்பட்ட வாக்குச்சீட்டு கிழித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழிந்த வாக்குச் சீட்டு வாக்குச் சாவடி அதிகாரியின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

வாதுவ நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சமிந்திர குமார தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## கோடரியுடன் சென்றதால் சிக்கல்

தம்பானையில் உள்ள வேடுவ சமூகத்தின் துணைத் தலைவர் குன்பாண்டியா எத்தோ மற்றும் அவரது குடும்பத்தினருக்கு வாக்களிக்க இடமளிக்கவில்லை.

தோளில் கோடரியுடன் வாக்குச் சாவடிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதால் அவர்கள் வாக்களிக்காமல் வீடு திரும்பினர்.

தம்பானை கனிஷ்ட பாடசாலை வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்க அழைத்தபோது, வேடுவ சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் அவர்களின் கலாச்சாரத்தின் அடையாளமான கை கோடரியை தோளில் சுமந்து வந்திருந்தமையால், வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட தலைமை அதிகாரி அவர்களை வாக்களிப்பு நிலையத்துக்கு நுழைய அனுமதி மறுத்துள்ளார்.

எவ்வாறாயினும், அந்த சமூகத்தின் தலைவரான உருவரிகேலகே வன்னில எத்தோ வந்தபோது, தோளில் கோடரியுடன், அவர் வாக்குச் சாவடிக்குள் நுழைந்து வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்.

அத்துடன், அந்த குலத்தைச் சேர்ந்த மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்து, வழக்கம் போல் கோடாரியை ஏந்தி வாக்குச் சாவடிக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், அந்த குலத்தைச் சேர்ந்த துணைத் தலைவரும் அவரது குடும்பத்தினரும் வாக்களிக்க வரவில்லை.

## தேர்தல் மோசடியில் ஈடுபட்டவர் நீக்கம்

எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடியில் தேர்தல் கடமையில் மோசடி செய்த உத்தியோகத்தர் ஒருவர் தேர்தல் கடமையிலிருந்து அகற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.


காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவின் புதிய காத்தான்குடி ஹிஸ்புல்லா பாலர் பாடசாலை வாக்குச் சாவடியில் கனிஷ்ட வாக்கெடுப்பு(ஜே.பி.ஓ) உத்தியோகத்தராக கடமையாற்றியவரே இவ்வாறு ஆகற்றப்பட்டுள்ளார்

இந்த வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்களிக்கச் சென்ற வயது போன வாக்காளர் ஒருவர் தனக்கு வாக்களிக்க கண் பார்வை சிரமமாக உள்ளதால் ஒரு கட்சியொன்றை குறிப்பிட்டு அதற்கு வாக்களிக்குமாறு கனிஷ்ட வாக்கெடுப்பு உத்தியோகத்த ரிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து அந்த உத்தியோகத்தர் புள்ளடியிட்டதில் சந்தேகம் கொண்ட குறித்த தாய் தன்னிடம் வாக்குச் சீட்டை காண்பிக்குமாறு. கூறவே வேறு இரண்டு கட்சிகளின் சின்னங்களுக்கு வாக்களித்திருப்பதை கண்டு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரி வேறு ஒரு வாக்குச் சீட்டைக் கொடுத்து குறித்த தாயின் வாக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் மட்டக்களப்பு மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து தேர்தல் அதிகாரிகள் உரிய வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் குறித்த கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர் கடமையில் இருந்து அகற்றப்பட்டு தேர்தல் அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்

இது தொடர்பாக பொலிஸாரும் தேர்தல் அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்













## 31ஆவது ஆண்டு நினைவேந்தல்

எஸ்.தில்லைநாதன்

1993 நவம்பர் 13ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திற்கு விமானப் படையினரால் குண்டு வீசிக் கொல்லப்பட்ட 9 பேரின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் புதன்கிழமை (13) அனுஷ்டிக்கப்பட்டது.

ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் ஆலயத்தில் காலை திருப்பலியின் நிறைவில் உணர்வுப்பூர்வமாக இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

நினைவுத் திருப்பலியை அருட்பணி கை.கனிசியஸ் ராஜ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.







### சமூக ஊடகங்களுக்கு எதிராக

# 1,388 முறைப்பாடுகள்



வாக்களிப்பு தினமான வியாழக்கிழமை (14) அன்று சமூக ஊடகங்கள் ஊடாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டமை தொடர்பில் 1,388 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரையிலான காலப்பகுதியில், 747 சமூக ஊடக இணைப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

அத்துடன், ஒக்டோபர் 11 முதல் இதுவரையில் மொத்தமாக 2,033 சமூக ஊடகங்கள் தொடர்பான புகார்கள் பெறப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள், இனம், மதம், ஆளுமை மற்றும் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில், 385 பதிவாகியுள்ளன.

மேலும், வெறுப்பு பேச்சு தொடர்பாக 203 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# மரண சடங்குக்கு சென்றவர் பலியானார்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மரண சடங்குக்கு சென்ற மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய குகதாஸ் விஜிதா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 09ஆம் திகதியன்று யாழ்ப்பாணம்-உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற மரண சடங்குக்குக் பங்கேற்ற அந்த நபர், மறுநாள் மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் போது, கொக்காவில் பகுதியில் வைத்து, பன்றி ஒன்று வீதியின் குறுக்கே ஓடியுள்ளது.

இதில் அவர் பயணித்த வாகனம் பன்றியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்தவரை மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், புதன்கிழமை(13) அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## பண்ணிசை போட்டியில் யக்சன்




எஸ்.தில்லைநாதன்

அண்மையில் நடைபெற்று முடிந்த தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் யாழ். அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் வரதகுலம் யக்சன் தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

யாழ். அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக சாதனை படைத்துள்ளார். குறித்த மாணவனை ஆசிரியை ரவிவர்னன் அருளினி பயிற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது.

## குளவி கொட்டியதில் 17 சிறுவர்கள் பாதிப்பு



தலாவ - ஹலம்பவெவ பிரதேசத்தில் அமைந்துள்ள முன் பள்ளியில், 17 சிறுவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முன் பள்ளியின் வருடாந்த பன்முகக் கண்காட்சியின் போது, பாடசாலை மைதானத்தில் உள்ள மாமரத்திலிருந்த குளவி கூட்டை பருந்து ஒன்று கிளறியதால், மூன்று முதல் நான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பின்னர் அந்த சிறுவர்கள் தலாவ ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில், மூன்று சிறுவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



# மிக அமைதியாக விரலில் பூசப்பட்ட ஊதா மை

நாட்டில் என்னதான் நடக்கிறது என்று பார்த்திருந்த காலம் மலையேறி, என்ன? நடந்தது என்று கேட்கும் அளவுக்கு, தேர்தலொன்று நடந்து முடிந்துள்ளது. இல்லை, இல்லை, தேர்தலொன்று நடந்ததா? என கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மிக அமைதியான முறையில், 10ஆவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 2024 நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெற்றது.

மிக அமைதியான முறையில் வாக்களிப்பு நடைபெற்றிருந்தாலும், வாக்காளர்களில் பலரும் வாக்களிக்கவில்லை அல்லது வாக்களிக்கச் செல்லவில்லை. தங்களுக்குக் கிடைத்த ஜனநாயக உரிமையை அவர்கள் பயன்படுத்த விருப்பம் இல்லாதவர்களாகவே இருந்தனர். இது பெரிய ஆபத்தாகும்.

ஆகையால், எதிர்வரும் தேர்தல்களில், வாக்களிக்கும் முறைமையை இலகு படுத்தும் வகையில், சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல், புதிய தேர்தல் சட்டமொன்றைக் கொண்டுவரமுடியுமாயின், வாக்காளர்கள் பாதிக்கப்படாத வகையில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாக்களிக்காவிடில் தண்டனை அறவிடவும், வரப்பிரசாதங்களை இல்லாமல் செய்வதற்கான சரத்துக்களையும் சேர்க்க வேண்டும்.

வாக்களித்தவர்களையும், வாக்களிக்காதவர்களையும் இலகுவாக இனங்கண்டு கொள்ள முடியும். விரலில் பூசப்பட்ட ஊதா நிற மை, இரண்டொரு வாரங்களுக்கு அப்படியே இருக்கும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட முறை வாக்களிப்பதைத் தடுக்க இந்த மை பல நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இந்த பெயிண்ட் கரைசலில் 'சில்வர் நைட்ரேட்' உள்ளது. இது தோல் மற்றும் சூரியனுடன் வினை புரிந்து சில நாட்கள் நீடிக்கும் கறையை ஏற்படுத்துகிறது. சவர்க்காரம், தண்ணீரால் அதை அகற்றவே முடியாது. 'சில்வர் நைட்ரேட்' தோலின் வெளிப்புற அடுக்கில் ஊடுருவிச் செல்வதால், மெல்லிய பொருட்களைப் பயன்படுத்தி அதை அகற்றுவது கடினம்.

1962ஆம் ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தலில் விரலில் முதன்முதலில் இந்த தேசத்தின் குறி பதிவாகியது. உலகம் முழுவதும் தேர்தல்கள் நடத்தப்படும்போது, அதன் ஒழுங்குமுறைக்காக விரலில் மை இவ்வாறு பூசப்படுகிறது.

இந்நாட்டில் சிலர் பாராமுகமாக இருந்தாலும், மக்களுக்கு வழங்கப்பட்ட இந்தத் தேர்தல் விலை மதிப்பற்றது. இன்றைய பொதுத் தேர்தலில் வரும் முடிவுதான் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். ஒவ்வொரு கட்சியின் கொள்கைகளையும், கடந்த காலத்தையும், நாம் அளிக்கும் வாக்குகளையும் பார்க்கும் போது, இந்த நாட்டின் எதிர்காலப் பாதையைத் தீர்மானிக்கும், வாக்குப்பதிவு முடிந்தவுடன் சிலர் தொலைபேசியில் நிலைமையைக் கேட்டறிகின்றனர். நிலைமையை அப்படிச் சொல்லலாம் என்றால், கணக்கெடுக்கும் அதிகாரிகளே தேவையில்லை. விருப்பு வாக்குகள் எண்ணப்படும் போதும், அமைதியை கடைப்பிடிக்க வேண்டும்.

தேர்தல் கலாசாரத்தில் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது தேர்தல் காலம் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்குச் சூழல் இப்போது மாறிவிட்டது.

இந்த நாட்டின் எதிர்கால நிறத்தை வாக்கெடுப்பு முடிவுகள் தீர்மானிக்கும் என்பதை நினைவூட்டி, எதிர்கால தேர்தல்களும் இதேபோன்று, அமைதியாக நடைபெற வேண்டும். அதற்கு, ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் 2024 பொதுத் தேர்தல் ஓர் உதாரணமாகும்.



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, மனம், உலகிலுள்ள எந்த வேகச் சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல் திணறுகின்றது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 26

# அபிவிருத்தி வழி சமாதானம்-4



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த 2002 முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகளில் அபிவிருத்தி வழி சமாதானம் என்பது முக்கியமான கருப்பொருளாக வெளிப்பட்டது. இருந்தபோது உள்நாட்டின் சில முக்கியமான அசைவியக்கங்கள் செல்வாக்குச் செலுத்தின. இவற்றில் மூன்று முக்கியமான அம்சங்கள் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்தைத் தீர்மானித்தன.

முதலாவதாக, சமாதான முன்னெடுப்பானது, இனத்துவ மோதல், இராணுவ மயமாக்கல் மற்றும் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான இராணுவ அதிகார சமநிலையால் வரையறுக்கப்பட்டது.

1990களில், தமிழ் தேசியவாதத்திற்குள் பரந்த பன்முகத்தன்மை கொண்ட அரங்காடிகளும் அவர் தம் நிலைப்பாடுகளும் ஒருபுறமாகவும் புலிகளின் இராணுவ திறன்கள் மற்றும் உத்திகள் இன்னொருபுறமாகவும் ஆதிக்கம் செலுத்தின.

அதே நேரத்தில், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்தின் 1994-1995இல் தோல்வியடைந்த சமாதான பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஒரு முழுமையான 'சமாதானத்திற்கான போர்' மூலோபாயத்திற்கு நாடு திரும்பியது. எவ்வாறாயினும், 1990களின் பிற்பகுதியில் போரிடும் தரப்பினர் பரஸ்பரம் புண்படுத்தும் முட்டுக்கட்டையை அடைந்தனர்.

புலிகளின் தொடர்ச்சியான இராணுவ முன்னேற்றங்கள் தொடர்ந்தன. பரந்த பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அரசாங்கத்துடன் சமமான நிலையை அவர்கள் உருவாக்கினர்.

இந்த அதிகார சமநிலை போரிடும் தரப்புகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்து, பேச்சுவார்த்தை செயல்முறை முறிந்த போதிலும், அவர்களை மீண்டும் போரில் ஈடுபடவிடாமல் தடுத்தது.

அதிகாரச் சமநிலை அரசாங்கத்துக்கு ஆதரவாகச் சாய்ந்தபோது, சர்வதேச அரங்காடிகள் இலங்கை அரசாங்கத்தை ஒரு அரச அரங்காடியாககவும், புலிகளை ஒரு அரச சார்பற்ற அரங்காடியாகவும் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் சமச்சீரற்ற முறையில் கையாண்டதன் காரணமாக, யுத்தம் சாத்தியமான மற்றும் அவசியமான உத்தியாக மீண்டும் தோன்றியது.

22 பெப்ரவரி 2002 அன்று கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையானது இந்த இராணுவச் சமநிலையை முடக்கி, நடைமுறையில் இரட்டை அரச கட்டமைப்பைப் பிரித்து, புலிகள் மற்றும் அரசாங்கத்தைச் சமாதான முன்னெடுப்புகளின் பிரதான கட்சிகளாக நிறுவன மயமாக்கியது. பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் மனிதாபிமான மறுவாழ்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் குறுகிய வரையறுக்கப்பட்ட முதலாம் நிலை (track one) பேச்சுவார்த்தைகளுக்கு இந்த விடயங்கள் அடிப்படையாக இருந்தன. முரண்பாட்டுடன் தொடர்புடைய மற்ற பங்குதாரர்கள் முறையான பேச்சுவார்த்தைகளில் சேர்க்கப்படவில்லை.

அரசியல் ரீதியாக அமைதிக்கான ஒருமித்த கருத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கூடுதல் செயல்முறை எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.), சிறுபான்மை முஸ்லிம்கள், புலிகள் அல்லாத தமிழ் அரங்காடிகள் மற்றும் பௌத்த சங்கம் உட்பட பரந்த பன்முகத்தன்மை கொண்ட சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட அரசியல் எதிர்க்கட்சிகள் அனைத்தும் சமாதான முன்னெடுப்பிலிருந்து விலக்கப்பட்டன. சமாதான பேச்சுவார்த்தைகளில் புலிகளும் அரசாங்கமும் மட்டுமே பங்கேற்பதாக இருந்தது.

இரண்டாவதாக, சமாதான முன்னெடுப்புகளும் அரசியல் நிறுவன முன்நிபந்தனைகளால் கட்டமைக்கப்பட்டது.

இலங்கையின் இனத்துவ ரீதியான மோதல் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியலானது, கணிசமான மோதல்களைத் தீர்ப்பதற்கு வாய்ப்பற்ற நிறுவன மற்றும் அரசியல் தடைகளை உருவாக்கியுள்ளது.

கொலனித்துவத்திற்குப் பிந்தைய தாராளமய ஜனநாயகம் இனவாத அணிதிரட்டலை வளர்த்தெடுத்த விதத்தில் முக்கிய மோதலை உருவாக்கும் பொறிமுறைகளை உள்ளடக்கியதாக இருந்தது.

சிறுபான்மையினரின் குறைகளுக்கு இடமளிக்கும் வகையிலான அரச சீர்திருத்தங்களை மிகவும் கடினமாக்கும் ஒரு இனத்துவ தன்மையை இலங்கை அரசு பெற்றுள்ளது. அரசின் சீர்திருத்தங்களுக்குக் கீழிருந்து வரும் அழுத்தத்தை அரசின் இன வெகுஜனத் தளம் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் அதே வேளையில், சமாதானத்திற்கான உயரடுக்கு பேச்சுவார்த்தைகள் எப்போதும் சந்தர்ப்பவாத எதிர் அணிதிரட்டலின் அபாயத்தை எதிர்கொள்கின்றன.

இதன் விளைவாக இலங்கையில் இனவாதம் செழித்து வளர்ந்துள்ளது. அது மோதலை உருவாக்கும் மற்றும் ஜனநாயக சுய-புதுப்பித்தலுக்கான சிறிய திறன் கொண்டது. இந்தப் பின்னணியில், 2001ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் சமாதானத்திற்கான வாய்ப்புகள் குறித்த நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கை ஆகிய இரண்டிற்கும் காரணங்களைக் கொண்டு வந்தது.

ஐ.தே.மு. அரசாங்கம் ஒரு அரசியல் தளத்தில் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டது, அது சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு வாக்குறுதியளித்தது. புதிய தாராளமய அபிவிருத்தி மாதிரியை முன்னெடுத்துச் செல்வதற்கான அவர்களின் முதன்மையான குறிக்கோளுக்குப் பேச்சுவார்த்தை சமாதானத்தை ஒரு முன்நிபந்தனையாகக் கண்டது. எவ்வாறாயினும், அரசாங்கம் பாராளுமன்றத்தில் சிறிய பெரும்பான்மையுடன் பலவீனமான கூட்டணியை அடிப்படையாகக் கொண்டது. அது துண்டாடப்பட்ட அரசியல் உயரடுக்கை எதிர்கொண்ட அதேவேளை, சமாதானத்திற்கான அரசியல் கருத்தொற்றுமையை அதனால் பெற இயலவில்லை.

பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்கவின் ஐ.தே.க. அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சக்திவாய்ந்த நிறைவேற்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் இடையிலான சர்ச்சைக்குரிய கூட்டு வாழ்வில் இது குறிப்பாகத் தெளிவாகத் தெரிந்தது.

இனத்துவத் தேசியவாதத்தின் எதிர் அணிதிரட்டலுக்கு இது வித்திட்டது. அரசியல் ரீதியான முக்கியப் பிரச்சினைகளுக்கான நியாயமான தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் இடத்தைக் கொண்டிருந்தது. அது வேரூன்றிய மையமயமாக்கல் மற்றும் பெரும்பான்மைவாதத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் மோதல் நிர்வாகத்தின் உத்திகளைத் தேட வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், முரண்பாடான தீர்வைக் காட்டிலும் மோதலை நிர்வகித்தல் மற்றும் அரசியலற்றதாக்குதல் ஆகிய உத்திகளைப் பின்பற்றுவது, தமிழ் சிறுபான்மைக் குறைகளைக் கணிசமான அளவில் நிவர்த்தி செய்யும் அரசாங்கத்தின் விருப்பத்திலும் திறனிலும் புலிகளின் ஆழ்ந்த அவநம்பிக்கையை உறுதிப்படுத்தி மேலும் மேம்படுத்தியது.

மூன்றாவதாக, சமாதான முன்னெடுப்பு இரண்டு மடங்கு பொருளாதார நெருக்கடியால் கட்டமைக்கப்பட்டது.

அரசாங்கம், ஒருபுறம், பொருளாதார தேக்க நிலையை எதிர்கொண்டது, இராணுவச் செலவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்தன. இது அவர்களின் அரசியல் நியாயத்தன்மை மற்றும் தேர்தல் உயிர்வாழ்வை அச்சுறுத்தியது.

இந்த அபிவிருத்தி நெருக்கடியானது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அரசியல் தடைகளுடன் இணைந்து அபிவிருத்தியை அரசாங்கம், புலிகள் மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு ஒன்றிணைக்கும் ஒரு புள்ளியாக மாற்றியது. 'அபிவிருத்தியின் மூலம் சமாதானம்' என்பது ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் நவதாராளவாத பொருளாதார அபிவிருத்தியில் முதன்மையான கவனம் செலுத்தியதோடு, மோதல் முகாமைத்துவத்தைச் சமாதான முன்னெடுப்புக்கான முன்நிபந்தனையாகக் கருதினர்.

உடனடி பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த புலிகளுக்கும் இது இணக்கமாக இருந்தது. ஆனால் இது அடிப்படை அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முதல் படியாக மட்டுமே இருக்கும் என்ற புரிதலுடன் இருந்தது.

சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு, அரசாங்கத்தின் சந்தை நட்பு அபிவிருத்தி மாதிரியை ஊக்குவித்தல் மற்றும் தாராளவாத சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இலங்கையை வெற்றிக் கதையாக மாற்றுவது ஆகிய இரண்டும் நோக்கமாக இருந்தது.

இதன் பொருள், இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச சமூகம் இடையே 'அபிவிருத்தியின் மூலம் சமாதானத்தை' தொடர பரந்த உடன்பாடு இருந்தது. இதை ஆய்வாளர்கள் 'மோதல் தீர்க்கும் குதிரைக்கு முன் அபிவிருத்தி வண்டியை' வைப்பது என்ற வித்தியாசமான சொற்றொடர் மூலம் அழைத்தனர்.

இது பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பாளர்கள் மற்றும் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறுகியதாக வரையறுக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் போர் நிறுத்த உடன்படிக்கையின் உள்ளடக்கம் மற்றும் செயல்படுத்தல் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பகுதிகளின் உடனடி மனிதாபிமான தேவைகள் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டது, அதே நேரத்தில் சிறுபான்மை உரிமைகள், அதிகாரப் பகிர்வு மற்றும் கணிசமான அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றிற்கான அரச சீர்திருத்தங்களின் முக்கிய பிரச்சினைகள் மிகவும் குறைவான கவனத்தைப் பெற்றன.

இந்தச் சூழ்நிலையில், அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தங்கள் நலன்களைப் பின்தொடர்வதற்கும், தங்களுக்கு விருப்பமான தீர்வை நிறுவன மயமாக்குவதற்கும் முயன்றனர். இது புதிய சவால்களை உருவாக்கியது. அதை அடுத்த கட்டுரையில் நோக்கலாம்.

## கடிதங்கள்

### குப்பைத்தொட்டிகள் வேண்டும்

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா-கிளரண்டன் தோட்டப்பகுதியில் உரிய குப்பைத்தொட்டிகள் காணப்படாததால் அப்பகுதி மக்கள் மிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குப்பைகள் வீசப்படும் இடத்தின் அருகில் கிறிஸ்தவ தேவாலயம் உள்ளதால் தேவாலயத்திற்கு வருவோர்கள் மற்றும் அவ்வீதியில் பயணங்களை மேற்கொள்வோர்; சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும் . கட்டாக்காலி நாய்கள் குப்பைகளை; வீதிக்கு இழுத்துச் செல்வதால் அதிக துர்நாற்றம் வீசப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில்; வெள்ளநீரினால் குப்;பைகள் அடித்துச் செல்லப்பட்டும் வீதியில் கிடப்பதால் வாகனங்கள் செல்வதற்கும் பயணிகள் நடைபாதையை மேற்கொள்வதற்கும் சிரமமாக உள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய உரிய அதிகாரிகளிடம் இது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– மயூரி



# EDEX Mid-Year Expo 2024இன் பங்காளராக SLT-MOBITEL




இலங்கையில் கல்வி மற்றும் தொழில்நிலை விருத்தி ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்கான உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் SLT-MOBITEL, EDEX Mid-Year Expo 2024 இன் உத்தியோகபூர்வ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் பங்காளராக கைகோர்த்துள்ளது. இலங்கையின் கல்வி நாட்காட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்திருப்பதுடன், இந்நிகழ்வுக்கு SLT-MOBITEL இனால் Wi-Fi இணைப்பு வசதி வழங்கப்பட்டிருந்தது. கண்காட்சி முழுவதும் டிஜிட்டல் அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்கு இதனூடாக வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் SLT-MOBITEL பிரதான செயற்பாட்டாளர் எனும் கீர்த்தி நாமத்தை மீள உறுதி செய்யும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்ததுடன், கல்வி மற்றும் நிபுணத்துவ விருத்தி ஆகியவற்றில் ஆதரவை வழங்கியிருந்தது. மாணவர்கள், கல்விச் சேவைகளை வழங்குபவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு தமது சர்வதேச கல்வி வாய்ப்புகளை அணுகுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பு இந்த கண்காட்சியினூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கையின் பணியாளர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தில் முதலீடுகுளை மேற்கொள்ளும் முயற்சியாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆண்டின் EDEX Mid-Year Expo இனால் இலங்கையின் இளைஞர்களுக்கு வலுவூட்டுவதில் 20 வருட பூர்த்தி கொண்டாடப்படுகின்றது. சிறப்பை நோக்கிய அண்மையில் முயற்சிகளைத் தொடர்ந்து, புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் கண்காட்சி கவனம் செலுத்தியிருந்தது. மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிலல் எதிர்பார்ப்புகளை இனங்காண்பதற்கு பரிபூரண கட்டமைப்பை வழங்கியிருந்தது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், பிராந்திய மற்றும் தொழிற்பயிற்சி கல்வி நிலையங்களின் பிரதிநிதிகளுடன் பங்குபற்றுநர்களுக்கு ஈடுபாட்டை பேண முடிந்தது. Expo இனால் இலவச தொழில்நிலை வழிகாட்டல், உளவியல் பரிசோதனைகள் மற்றும் EDEX Think Green Initiative போன்ற நிலைபேறாண்மை செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை அணுகல் மற்றும் EDEX Nenapahana Community Outreach நிகழ்ச்சிக்கான அணுகல் ஆகிய வசதிகளை வழங்கியிருந்தது. வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகள் நிறைந்த தலைவர்களுக்கான EDEX Entrepreneur Zone போன்றவற்றுக்கான ஆதரவும் வழங்கப்பட்டிருந்தது.

தொழில்நுட்பத்தினால் எவ்வாறு பயிலலை மாற்றியமைக்க முடியும் என்பது வெளிப்டுத்தப்பட்டு, உத்தியோகபூர்வ 'ICT Solutions Partner' ஆக SLT-MOBITEL இனால் இந்த வாய்ப்பு பயன்படுத்தப்பட்டு, கல்வியில் காணப்பட்ட டிஜிட்டல் பாகுபாடு இடைவெளி நிவர்த்தி செய்யப்பட்டிருந்தது. பெருமளவு உள்ளடக்கமான கல்விசார் கட்டமைப்புகளை உருவாக்குவதில் நவீன ICT தீர்வுகள் எவ்வாறு செயலாற்றும் என்பதை EDEX உடனான பங்காண்மை வெளிப்படுத்தியுள்ளது. கண்காட்சியுடன் SLT-MOBITEL இன் ஈடுபாடு எனபது, மேம்படுத்தப்பட்ட இணைப்புவசதி மற்றும் அணுகல் திறன் போன்றவற்றினூடாக இலங்கையின் மாணவர்களை டிஜிட்டல் யுகத்துக்கு தயார்ப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு உத்வேகமளிப்பதாக அமைந்துள்ளது.




# கொமர்ஷல் வங்கிக்கு 'சிறந்த வங்கி' விருது

கொமர்ஷல் வங்கிக்கு இலங்கையின் சிறந்த வங்கி எனும் கௌரவிப்பு வழங்கப்பட்டது. அண்மையில் வொஷிங்டன் DC இல் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய (IMF) / உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தின் போது இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. கொமர்ஷல் வங்கியின் தவிசாளர் ஷர்ஹான் முஹ்சீன் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க ஆகியோர் இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர். Global Finance சஞ்சிகையால் இந்த விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Global Finance இனால் வருடாந்தம் வெளியிடப்படும் 'உலகின் சிறந்த வங்கிகள் 2024' பட்டியலில் இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியானது 22ஆவது ஆண்டாக இம்முறையும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட இந்த சஞ்சிகைக்கிணங்க, சிறந்த வங்கி விருதுகள் பரந்த அளவிலான சேவைகள், நீண்ட கால நம்பகத்தன்மை மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கங்களை வழங்கும் மேலும் வேகமாக மாறிவரும் வட்டி வீதத்தின் மத்தியில் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளைத் திறமையான முறையில் நிர்வகிக்கும் நிதி நிறுவனங்களை அங்கீகரிக்கின்றன.

Global Finance ஸ்தாபகர் மற்றும் ஆசிரியர் பீட பணிப்பாளர் ஜோசப் டி. ஜியாரபுடோவிடமிருந்து விருதை முஹ்சீன் மற்றும் மனதுங்க பெறுவதைப் படத்தில் காணலாம்.

# என் நண்பா

சாராயம், காசு, அரிசிப் பையோடு
இந்த தேர்தலும்
நடந்து முடிந்து விட்டது.

இப்போதும் நாங்கள் பாவித்த
அரசு பள்ளிக் கட்டிடம்
தபால் நிலையம்
அழிந்து கிடக்கும் வீதி
ஆசையோடு ஊஞ்சல் ஆடும்
ஆரம்ப சுகாதார நிலையம்
மாறாமல் அப்படியே இருக்க

உடைத்துக் கட்டிய கோயிலிலும்
புதிதாக வந்த விகாரையிலும்
பளபளக்கும் பெரிய பள்ளியிலும்
நேற்றுக் கொடி ஏறிய குழந்தை யேசு
ஆலயத்திலும் மாற்றங்கள்
அடிக்கடி நடந்து கொள்ளும்.

நன்கொடை வசூலில்
நலம் பெற்ற கடவுள்களும்
வேதாளங்களாய் விக்ரமாதித்தனையும்
சுமக்க பழகி விட்டது.

உனக்கும் ஒன்றும் இல்லை
எனக்கும் ஒன்றும் இல்லை
நண்பா
வரும் தேர்தலுக்கு
இந்த கவிதையை மீண்டும்
உரத்துப் படித்திட
இன்றைய திகதியை
ஞாபகத்திற்காக குறித்து வைக்கிறேன்.


அதோ
நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாண
சத்தம் கேட்கிறது
காதுகளை பொத்து..!

-காரையன் கதன்






# பாரதிகண்ட பெண்மை



பெண்மைபோற்றும் பாரதியின்
அருமைபெருமை பேசுவதுமாய்
வார்த்தைகளில் வாழ்வதுமாய்
அவர்கள் சொல்கிறார்கள்..!

தம்முடன் கூட இருப்பவர்களையே
விலைபேசியும்
விற்பனைசெய்தும் தான்
உறவுகளைத் தேடிக்கொள்ளும்
புத்திசாதுரியமும்
மனங்களைக் கவரும்
மாய தந்திரமும்
பெற்றுள்ளனர்...!

நம்பிக்கை துரோகத்திற்கும்
நயவஞ்சகத்திற்கும்
புதிய பெயரைசூட்டச் சொன்னால்
புதுமைக் கவி பாரதியே
அவர்கள் பெயரைதான்
சிபாரிசும் செய்வார்..!

அவரின்...
அழகிய வாழ்வியல் விழுமியங்களையும்
பெண்மைபோற்றும் புதியவரை
முறைகளையும்
தங்களுக்கேற்றதுபோல்
சாதகமாக்கிக் கொண்டதற்கு
மரணதண்டனைக்கும்
கட்டளையிடுவார்..!

பாவம் அவர்
பெண்மையைபோற்ற விளைந்தவர்..!
அவரது பெயரைச் சொல்லி
சொல்லியே
அத்தனை அநியாயங்களையும்
செய்துவிட்டுபோகும்..
சில்லறைகளையெல்லாம்
ஒரு தடவை
சிதற விட்டிருப்பாரோ என்னவோ
ஆனால், நிச்சயம் பதற
விட்டிருப்பார்..!

மொத்த பொய்களுக்கும்
தன்னையே சுட்டிநின்று
பழி பாவம் செய்வோரையும்
போலிவேஷமிடுவோரையும்
ஒன்றுமே அறியாமல்
ஏமாளியாகவும்
அதீத நம்பிக்கையுடன்
கூட இருப்பவர்களுக்கே
எல்லாவற்றையும்
சுட்டிக்காட்டியுமிருப்பார்..!

இவர் தான்
குல துரோகி என்றும்
இன விரோதி என்றும்..!

எம்போல்
எந்தவித பாவம் பரிதாபமும் பார்க்காமல்!
ஆம்!
அவரும் வீரத் தந்தைதான்..!

-வசு நிர்மல்



# காலக்கெடு



எவரும் முற்றிலும் அறியார்
சமுத்திரங்களின் ஆழத்தில்
நிறைந்த இரகசியங்களை,
மணலின் அடியில் புதைந்த
பல உலகங்களை,
மனிதன் அறியாத
உயிர்களின் துடிப்புககளை..!

காடுகள், காலத்தின் சாட்சிகள்,
பழமையானவை,
தம் கதைகளை மூடி வைத்தவை,
மரங்களின் சுவாசம்,
பூமியின் ஆசுவாசம் மலைகள்,
உயர்ந்து விண்ணை நாடுவதோ,
பூமியின் கட்டுப்பாட்டினின்று தப்பிதிமிறும்
ஆசை சிகரங்களுள் குமுறும் எரிமலைகளோ,
ஆதியும் அந்தமுமாய் தகிக்கும் ஆற்றல்

எண்ணிப்பார்த்தால் மனிதன் சிறியவன்,
ஆனால் அழித்தல் நிறைந்தவன்,
பூமியின் வளங்களைவாட்டும்
சின்ன குழந்தை,
அடங்காத சுயநலத்தில்
ஆடும் எங்களை,
கடிகாரம் எச்சரிக்குது!
நாளை ஒன்றை நிலைநாட்ட
நம்மை மாற்றி வாழ்வதே வழி,
இயற்கை விதித்தகெடு
கண்முன்னே காலனாய்
மாறு முன்னர்
மனிதா, விழித்தெழு..!

- அருவி






## உலகை ஆழப்போகும் AI

# தொழில்நுட்பத்தின் புதிய பரிமாணம்



நி.பானுஷா,
ஊடக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

மனிதன் தோன்றிய போதே தொடர்பாடலும் தோற்றம் பெற்று விட்டது. தொடர்பாடலிற்கான கருவிகள் வளர்ச்சி அடைந்து தொழில்நுட்ப ரீதியில் பல வழியில் முன்னேற்றம் பெற்றுள்ளது. அதிலும் இன்று விதையிலிருந்து மரம் தோன்றியது போல் செயற்கை நுண்ணறிவு (*Artificial Intelligence, AI*) வரை மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் உலகளவில் மாபெரும் கவனத்தை பெற்றுள்ள ஒரு தொழில்நுட்பமாக AI மாற்றம் பெற்றுள்ளது.

AI, மனிதச் செயற்பாடுகளை சுலபமாக செய்யவும், கணிப்புகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு துறைகளில் வெற்றியூட்டும் வகையில் பயன்படுகின்றது. தற்போது உலகின் பல்வேறு பகுதிகளில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இது எதிர்காலத்தில் சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகளில் பெரிய புரட்சிகளை உருவாக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

செயற்கை நுண்ணறிவின் தாக்கமானது தொழில்நுட்பதம், அறிவியல் ஆராய்ச்சி, மற்றும் மனிதர்களின் அன்றாட செயல்களில் பரவலாக காணப்படுகிறது. உலகளவில் AI இல் முதலிடத்தில் நிற்கும் நாடுகள் இது போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியில் மாபெரும் முன்னேற்றங்களை எட்டி வருகின்றன.

AI இன் உதவியுடன் கணினிகள் மற்றும் இயந்திரங்க்ள் மனிதனைப் போல கற்றல் செய்யத் தொடங்கி உள்ளன. மெஷின் லெர்னிங் (*Machine Learning*) மற்றும் டீப் லெர்னிங் (*Deep Learning*) ஆகிய முறைகள் மூலம் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப கணினி தொகுப்புகளை உருவாக்குவதில் பெரும் சாதனைகளை காண்பித்துள்ளன.

இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு மனிதர்களின் வேலைச் செயற்பாடுகளை எளிமைப்படுத்தியுள்ளது.

இதன் பயன்பாடுகள் பல்வேறு துறைகளில் விரிவடைந்துள்ளன. இதன் தாக்கம் கல்வி, சுகாதாரம், வணிகம், வாகன தொழில்நுட்பம், தொழில்துறை உற்பத்தி, மற்றும் உற்பத்தி பணி ஆகியவற்றில் பெரிதும் காணப்படுகிறது.

கல்வித்துறையை எடுத்துக் கொண்டோமானால் தனிப்பட்ட மாணவர்களின் திறன் மற்றும் வேகத்திற்கு ஏற்ப கல்வி முறைகள் வடிவமைக்கப்படுகின்றன. "அளவிடப்பட்ட கற்றல்" (*Personalized Learning*) என்ற முறையில், AI தொழில்நுட்பம் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அவர்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி திட்டங்களை உருவாக்குகிறது. இது சிறந்த கல்வி முடிவுகளை ஏற்படுத்துவதற்கான வழி ஆகும்.

மருத்துவத் துறையில் AI இன் பங்கு மிக முக்கியமானது. நோயாளியின் பாதிப்பின் அடிப்படையில் AI மருத்துவர்களுக்குச் சிகிச்சை தொடர்பான முன்னறிவிப்புகளை வழங்குகிறது. மேலும், நோயின் தீவிரம் மற்றும் சிகிச்சையின் விளைவுகளைக் கணிப்பதிலும் உதவு புரிகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் AI மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் கண்காணிப்பது, கழிவு நீக்கப் பணிகள், வனச்சரிவு கண்காணிப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

எதிலும் சாதகம் போல சில பாதகமும் காணப்படுகின்றது. அது போலவே, AI தொழில்நுட்பம் ஊடாக பாதகமான சில விடயங்களும் இடம் பெறுகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் பல்வேறு தொழில்களில் மனிதர்களின் பணிகள் இயந்திர தொழில்நுட்பங்களுக்கு மாற்றப்படலாம். இதிலும் குறிப்பாக 'ஆட்டோமேஷன்' தொழில்நுட்பங்கள் (*Automation Technologies*) பல பணிகளையும் விரைவாக நிறைவேற்றுகின்றன. எனவே மனிதனுக்கான வேலைவாய்ப்புகள் குறைகின்றன. குறிப்பாக உற்பத்தி, சேவைகள் மற்றும் வணிகத் துறைகளில் சிக்கல்களை எதிர்காலத்தில் பாரயளவில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

AI தொழில்நுட்பத்தின் ஒரு முக்கிய பிரச்சினை என்பது தகவல் பாதுகாப்பு மற்றும் தனியாள் பாதுகாப்புப் பிரச்சினை. கணினி தரவுகளில் வாடிக்கையாளர்களின் தகவல்கள் பெரும்பாலும் சேகரிக்கப்படுகின்றன. இதனால் தனியாள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளிற்கு வாய்ப்புக்கள் உள்ளது.

AI இன் எதிர்காலம் மிகவும் பரவலாக இருக்கும் என்று கூறலாம். அடுத்த சில ஆண்டுகளில் மனிதர்கள் மற்றும் AI கூட்டணியில் செயல்படுவது மிகவும் சாதாரணமான ஒன்றாகக் காணப்படும். இந்த புதிய பரிமாணம் அதிக திறன் வாய்ந்த தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு களத்தில் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்தும்.

விவசாயத்தில் நிலப்பரப்புகளின் பராமரிப்புகள், பயிர் கண்காணிப்பு, மற்றும் வியாபாரங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் உதவுகின்றது. இது உலகளவில் உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

செயற்கை நுண்ணறிவு உலகில் பல்வேறு துறைகளில் பெரிய புரட்சிகளை ஏற்படுத்தி வருகிறது. மனிதர்களின் வேலை முறைகள், அறிவியல் ஆராய்ச்சிகள், மற்றும் சமூக உறவுகளுக்கு புதிய வழிகளையும் திறந்துள்ளது.

ஆனால், இதனுடன் வரும் சவால்கள், தகவல் பாதுகாப்பு, சட்டங்கள் மற்றும் பொருளாதார பாதிப்புகள் ஆகியவற்றையும் கவனமாகக் கையாள வேண்டும். AI வளர்ச்சியின் அடிப்படையில் உலகம் புதிய சவால்களை எதிர்கொண்டு அதற்கான தீர்வுகளை உருவாக்கும் பொறுப்பில் உள்ளது.

இதையே அன்று வள்ளுவர், 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால் மிகுத்துப் பெயின்' என்பதினூடாக நிறையற்ற மயிலிறகானாலும் ஒரு வண்டியில் அளவிற்கு அதிகமாக ஏற்பட்டால் அச்சு உடைந்து விடும் எனக் கூறி உள்ளார். அது போலவே எத்தகைய தொழில்நுட்பம் ஆயினும், நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கும் வரையில் உலகம் முன்னேறும் அதனை அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்தும் பட்சத்தில் உலகிற்கு ஆபத்தாகவே அமையும்.




# கதைத்து என்ன பயன்?



ஜீவரத்தினம் கஜீபா,
ஊடக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம் முழுவதும் எந்த பக்கம் பார்த்தாலும் சாராயக்கடைகள் தான்.

மது அருந்துவதால் உருவாகும் தாக்கமானது தனி நபர்களிலிருந்து சமூகங்கள் வரை உடல், உள, சமூக ரீதியில் பாரிய தாக்கத்தை உருவாக்கி உள்ளது. யாழ்ப்பாணம் போன்ற பிராந்தியங்கள் வரலாற்று, கலாசார மற்றும் சமூக-பொருளாதார காரணிகளால் தனித்துவமான போக்குகளைக் கொண்டுள்ளது .

தற்காலத்தில் மதுப்பழக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதிக இளைஞர்கள் மற்றும் பெண்கள் தற்காலத்தில் மது அருந்துவதில் ஈடுபடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு மோதல்கள் மற்றும் அடுத்தடுத்த சமூக, பொருளாதார மாற்றங்களைத் தொடர்ந்து, இப்பகுதியில் மது பயன்பாடு அதிகரிக்கக் காரணமாகியது. பல்பொருள் கடைகள், உணவுக் கடைகள் போலவே இந்த சாராயக் கடைகளும் அதே இடத்தில் அமைந்துள்ளன.

யாழில் பல்கலைக்கழகங்களுக்கு அருகிலும் பாடசாலைகளுக்கு அருகிலும் இந்த மதுபான சாலைகளை அமைக்க ரணில் அரசு அனுமதி கொடுத்துள்ளது. இயன்றளவில் அதிகமான அரசியல்வாதிகளால் பேசப்படும் ஒரு பேசுபொருள் "கடந்த மூன்று மாதங்களில் ரணில் அரசு ஏன் 300 க்கும் மேற்பட்ட மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை வழங்கியது என்பதாகும். முன் எப்போதும் இல்லாது குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் தற்போது இதை ஒரு பேசுபொருள் ஆக்குவதற்குக் காரணம் வரப்போகின்ற பாராளுமன்ற தேர்தல் ஆகும். இந்த மதுபான சாலைகள் அதிகரிக்கின்ற விடயம் பேசப்பட வேண்டிய விடயம் தான் அது அரசியல்வாதிகளால் அல்ல மக்களினால் பேசப்பட வேண்டிய விடயமாகும். ஏனெனில் அரசியல்வாதிகள் தங்களுடைய சொந்த அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இதனை ஒரு பேசு பொருள் ஆக்கிக் கொள்கின்றனர். இது எவ்வாறு இருக்க இன்னொரு பக்கம் மதுபான சாலைகளின் அனுமதிகளினை இரத்து செய்யுமாறு எதிர்த்து மக்கள் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். ரணில் அரசு மதுபானசாலைகளுக்கான அனுமதிகளை வழங்குகின்ற போது அதனை எதிர்த்து பல்வேறு பகுதிகளில் மக்களினால் எதிர்ப்புக்களும் போராட்டங்களும் நடைபெறுக்கின்றபோதிலும் அதை எதையும் பொருட்படுத்தாது முன்னால் அரசு அதிகமான மதுபான சாலைகளுக்கான அனுமதிகளினை வழங்கியது. இந்த மதுபான சாலைகளின் உருவாக்கங்களுக்குப் பின்னால் அரசியல்வாதிகள் பலரும் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இருப்பினும் கூட, இதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கைகளுக்குக் கிடைக்கவில்லை. எது எப்படி இருந்தாலும் அந்த அரசியல்வாதிகள் இந்த மதுபான சாலைகளின் உருவாக்கத்தினால் பல கோடிகளினை தங்கள் வங்கிகளில் வைப்புச் செய்துள்ளனர் என்று தான் சொல்ல வேண்டும்.

முன்னைய கட்டுப்பாடுகளின் அடிப்படையில், வணக்க ஸ்தலங்களிலோ, பாடசாலைகளுக்கு அருகிலோ, பல்கலைக்கழகங்களின் அருகிலிருந்தால் மதுபான சாலைகளை அமைப்பதற்கு அனுமதி கிடையாது. ஆனால், இப்பொழுது அந்த அந்த கட்டுப்பாடுகள் இணையும் மீறி இவையெல்லாம் நடந்தேறுகின்றன.

எது எப்படி இருந்தாலும், இந்த மதுபான சாலைகளின் உருவாக்கத்தால மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது ஆய்வுகளின் அடிப்படையில் உண்மையாகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பாக 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், குறிப்பாகக் குறிப்பிட்ட மக்கள் தொகையில் மது அருந்துதல் பரவலாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் (ADIC) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்திய ஆய்வில், வயது, பாலினம் மற்றும் சமூக அந்தஸ்தின் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் மது அருந்துவதற்கான தனித்துவமான அம்சங்களில் ஒன்று, உள்ளூர் முதியவர்களால் பரவலாக உட்கொள்ளப்படும் பனைவெல்லம் போன்ற பாரம்பரிய பானங்களின் பரவலாகும்.

ஒட்டுமொத்த நுகர்வுப் போக்குகளின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டின் தரவு மது அருந்துவதில் மிதமான அதிகரிப்பைக் குறிக்கிறது, சமூக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகக் குடிப்பழக்கத்தில் ஈடுபடும் இளைய மக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களின் கிடைக்கும் தன்மை இந்த போக்குகளைப் பாதித்திருக்கலாம்.

இருப்பினும், நுகர்வு விகிதங்களைக் குறைக்கும் நோக்கில், மது அருந்துவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பொதுச் சுகாதார முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் ஆய்வு குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மது அருந்துதல் என்பது சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, சமூக மற்றும் பொருளாதார காரணிகளிலும் தாக்கம் செலுத்துகிறது.

இடப்பெயர்வு மற்றும் உள்நாட்டு மோதலின் மரபு காரணமாக அதன் மக்கள் தொகை அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளது, இது பாரம்பரிய சமூக கட்டமைப்புகளை மாற்றியுள்ளது.

இளையவர்கள் வெவ்வேறு வகையான சமூக மயமாக்கலை நாடுவதால் இந்த மாற்றங்கள் குடிப்பழக்கத்தை மாற்றுவதற்குப் பங்களித்திருக்கலாம்.

யாழ். குடாநாட்டில் 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி 217 மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன. கலால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத 47 வையின் ஸ்டோர்கள், 22 உணவகங்கள், 148 கள்ல் மதுக்கடைகள், இராணுவத்தால் நடத்தப்படும் 6 ஹோட்டல்கள் இதில் அடங்கும். இப்பகுதியில் உள்ள 448 பள்ளிகள் மற்றும் 45 மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய பொதுச் சேவைகளுடன் ஒப்பிடும்போது, அதிக எண்ணிக்கையிலான மதுபானக் கடைகள் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. இது உள்ளூர் சமூகங்கள், குறிப்பாகத் தினசரி ஊதியம் பெறுவோர் மீதான எதிர்மறையான தாக்கத்தைத் தூண்டியுள்ளது.

மதுபான சாலைகள் தொடர்ந்து உருவாகி வருவதால், மதுபான சாலைகளின் அனுமதிகளினை முதலில் புதிய அரசு இரத்து செய்ய வேண்டும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அருகில் உள்ள மதுபான சாலைகளை மூட வேண்டும், மக்கள் இதனைத் தொடர்ந்து எதிர்த்து ஒன்றாகச் சேர்ந்து போராட்டங்களை நடத்த வேண்டும், கல்வி மற்றும் ஒழுங்குமுறை மூலம் மது அருந்துவதை நிவர்த்தி செய்வது பொதுச் சுகாதார விளைவுகளை மேம்படுத்துவதற்கு முக்கியமாகும். குறிப்பாகக் கிராமப்புறங்களில் மது விற்பனையில் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் குடிப்பழக்கத்திற்கு மாற்றாக சமூகம் சார்ந்த சமூகத் திட்டங்கள் மற்றும் சுகாதாரத் தலையீடுகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான அதிக முயற்சிகளை உருவாக்க வேண்டும்.

இலங்கையில், பாலின ரீதியாக யாழ்ப்பாணத்தில் மது அருந்துவது ஆண்களே அதிகமாக இருந்தபோதிலும், பெண்களின் மது பாவனையில், குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுள்ளதுடன்

சமூக-பொருளாதார நிலையில் மன அழுத்தம், சமூக சவால்கள் காரணமாக, குறைந்த சமூக-பொருளாதார நிலையைக் கொண்ட தனிநபர்களிடையே அதிக மது அருந்துதல் விகிதங்கள் பதிவாகியுள்ளன.

மேலும், மது வகைகள் மற்றும் அரக்கு போன்ற உள்ளூர் கஷாயங்கள் அதிகரித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் மது அருந்துதல் அதிகரிப்பதற்குப் பல காரணிகள் காரணமாக இருக்கலாம். மதுபான சாலைகளின் உருவாக்கத்தைத் தடுப்பதற்கான முதல் முயற்சியாக அனுமதிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே ஆகும். இது மக்களின் கோரிக்கைகளும் கூட.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கை பூராகவும் இந்த சாராயக் கடைகளில் உருவாக்கத்தினை தடுக்க பல முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவற்றுள் உள்ளூர் அரசாங்க கொள்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும், மேலும், போதை மீட்பு திட்டங்கள் மற்றும் பொது விழிப்புணர்வு பிரசாரங்களுக்கு அதிக ஆதாரங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

மேலும், இந்தப் போக்குகளைக் கண்காணிக்கவும், அப்பகுதியில் மது தொடர்பான தீங்கைக் குறைப்பதற்கான பயனுள்ள உத்திகளை உருவாக்கவும் தொடர்ச்சியான ஆராய்ச்சி அவசியமாகும். சாராயக் கடைகளுக்கு அனுமதிகளினை வழங்கிக் கொண்டு, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றார்கள் அன்று பொது மேடைகளில் கதைத்து என்ன பயன்?

## அம்பாறையில்...







## மட்டக்களப்பில்...






# வாக்களிப்பில்...

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத் தேர்தல் வியாழக்கிழமை (14) காலை 7 மணிமுதல் 4.00 மணி வரை நடைபெற்றது.

தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அந்தந்த வாக்கு நிலையங்களில் தமது வாக்குகளை பதிவு செய்தனர். பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிவாகும் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக சுமார் 8,352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அத்துடன், அனைத்து வாக்கு நிலையங்களிலும் வாக்காளர்கள் தமது வாக்கினை மிகவும் அமைதியான முறையில் வாக்களித்து சென்றமை குறிப்பிடத்தக்கது.



## கொழும்பில்...








## யாழ்பாணத்தில்...



## மன்னாரில்...



## முல்லைத்தீவில்...








## நுவரெலியாவில்...








## திருகோணமலையில்...





## வவுனியாவில்...




ஸ்பெயின்

ஸ்பெயினில் மீண்டும்

# அடைமழை எச்சரிக்கை



ஸ்பெயின் நாட்டின் தென்கிழக்கு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பாதிக்கப்பட்ட பல இடங்களில் இன்னும் இயல்பு நிலை திரும்பாத நிலையில், மீண்டும் ஸ்பெய்னில் கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில், சுமார் 5,000 வீடுகள் வெள்ளநீரில் மூழ்கின. அத்துடன், ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடு, உடைமைகள் உள்ளிட்ட அனைத்தையும் இழந்துள்ளனர். 223 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தைப் புரட்டிப் போட்ட இந்த வெள்ள பாதிப்பு காரணமாக, நாடு முழுவதும் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்பட்டது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சுமார் 2 வாரங்கள் ஆன பிறகும், பாதிக்கப்பட்ட பல இடங்களில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை. இந்த நிலையில், மீண்டும் ஸ்பெய்னில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


குறிப்பாகக் கிழக்கு டராகோனா மற்றும் தெற்கு மலாகா மாகாணங்களில், 12 மணி நேரத்தில் 180 மி.மீ. மழைப்பொழிவு பதிவாகும் என கூறப்பட்டுள்ளது.

அத்துடன், தெற்கு கிரனடா மற்றும் வேலன்சியாவின் கடற்கரை பகுதிகளுக்குக் கன மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், டராகோனா, பார்சிலோனா மற்றும் முர்சியா ஆகிய பகுதிகளில் மணிக்கு 119 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மலாகா பகுதியில் சுமார் 3,000 மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள பாதிப்பு ஏற்படும் இடங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லண்டன்



# திப்பு சுல்தானின் வாள் ஏலம்

மைசூர் மன்னர் திப்பு சுல்தானின் வாள், சுமார் 3.4 கோடி ரூபாய்க்கு (இந்தியப் பெறுமதி), கடந்த செவ்வாய்க்கிழமை (12), லண்டனில் ஏலம் விடப்பட்டுள்ளது.

மைசூர் மன்னர் திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேயக் கிழக்கிந்தியப் படைகளுக்கும் இடையே ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் கடந்த 1799ஆம் ஆண்டு நடந்த போரில், திப்பு சுல்தான் கொல்லப்பட்டார்.

இந்த போரில் திப்பு சுல்தான் பயன்படுத்திய வாள் ஆங்கிலேயர்களிடம் சிக்கியுள்ளது.

ஸ்ரீரங்கப்பட்டிணம் போரில் ஆங்கிலேயப் படையின் கேப்டனாக செயல்பட்ட ஜேம்ஸ் ஆண்ட்ரு டிக்என்பவரின் சேவையை அங்கீகரிக்கும் வகையில், திப்பு சுல்தானின் வாள் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வாளில் புலியின் வரி மற்றும் அரபு மொழியின் 'ஹா' என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தது.

'ஹ' என்ற எழுத்து திப்பு சுல்தானின் தந்தை ஹைதர் அலியை குறிக்கும் அடையாளம் ஆகும்.

2024ஆம் ஆண்டு ஜுன் வரை திப்பு சுல்தானின் வாள் ஜேம்ஸ் ஆண்ட்ரு டிக் குடும்பத்தாரிடம் இருந்தது.

தற்போது லண்டனில் உள்ள பான்ஹாம்ஸ் ஏல மையத்தில், அந்த வாள் 3.4 கோடி ரூபாய்க்கு (இந்தியப் பெறுமதி), கடந்த செவ்வாய்க்கிழமை (12) விற்கப்பட்டது.

இதேபோல் ஸ்ரீரங்கப்பட்டிணம் முற்றுகையில் பங்கேற்ற பீட்டர் செர்ரி என்பவருக்கு அளிக்கப்பட்ட வெள்ளிப் பதக்கம் ரூ.24 இலட்சத்துக்கு (இந்தியப் பெறுமதி) ஏலம் போனது.

அமெரிக்கா

ட்ரம்ப்பை தவிர்ப்பவர்களுக்கு

# சொகுசு கப்பலில் வாழ்க்கை



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப், எதிர்வரும் ஜனவரி மாதம் பதவியேற்கவுள்ள நிலையில், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள வில்லி வீ ரெசிடென்சஸ் எனப்படும் நிறுவனம், சொகுசுக் கப்பல் சுற்றுலாத் திட்டமொன்றை அறிவித்துள்ளது.

இந்த சுற்றுப்பயணம் ஓராண்டு முதல் 4 ஆண்டு கால அளவைக்கொண்டதாக இருக்கும். அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்க இருக்கும் ட்ரம்ப்பின் ஆட்சியைத் தவிர்க்க விரும்புபவர்களுக்கு ஏற்றதாக இந்த சொகுசுக்கப்பல் சுற்றுலாத் திட்டம் இருக்கும் என்று, அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அவரது ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் இருக்காமல், சொகுசுக் கப்பலிலேயே 4 ஆண்டு காலத்தைக் கழிக்கலாம் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சொகுசுக் கப்பல் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் செல்ல 2 பேர் தங்கக்கூடிய அறைகளை ஒருவர் பகிர்ந்து கொள்வதற்கு சுமார் 1,59,999 அமெரிக்க டொலர்கள் வசூலிக்கப்படும் என்றும் தனி அறை வேண்டுபவருக்கு 2,55,999 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக வசூலிக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த நிறுவனம் கூறியுள்ளதாவது, இந்த சுற்றுலாவின்போது, பல வெளிநாடுகளுக்குச் சென்று வரும் இனிமையான அனுபவம் கிடைக்கும். ஓராண்டு முதல் 4 ஆண்டு காலத்துக்கு கவலையற்ற அனுபவத்தை மக்கள் இதில் பெற முடியும். ஒரே தடவையாக இதில் பணம் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து வில்லா வீ நிறுவன தலைமைச் செயலதிகாரி மைக்கேல் பேட்டர்சன் கூறும்போது,

"இந்தப் பயணமானது அமெரிக்க ஜனாதிபதி தேர்தலைப் பின்னணியாகக் கொண்டது மட்டுமே. மேலும், இதில் பங்கேற்கும் பயணிகளுக்குத் தனித்துவமான சுற்றுலா அனுபவத்தை வழங்கவுள்ளோம். இது, அரசியல் நிகழ்ச்சியை ஊக்குவிப்பதற்காக அல்ல.

"இந்த சுற்றுலாத் திட்டத்தை, தேர்தல் முடிவுகளுக்கு முன்பாக நாங்கள் திட்டமிட்டு விட்டோம். தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் நாட்டை விட்டு வெளியேறுவோம் என்று கூறியவர்களுக்கான சரியான திட்டம் எங்களிடம் இருப்பதாக உணர்கிறோம்" என்றார்.

ஓராண்டு சுற்றுலா திட்டத்துக்கு `எஸ்கேப் ஃபிரம் ரியாலிட்டி', 2 ஆண்டு திட்டத்துக்கு `மிட்-டெர்ம் செலக் ஷன்', 3 ஆண்டு திட்டத்துக்கு `எவ்ரிவேர் பட் ஹோம்', 4 ஆண்டு திட்டத்துக்கு `ஸ்கிப் ஃபார்வேர்ட்' என்று இந்த சுற்றுலாத் திட்டங்களுக்கு வில்லா வீ நிறுவனம் பெயரிட்டுள்ளது.

முதலாவது போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்தியது இலங்கை



நியூசிலாந்துக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், தம்புள்ளவில் புதன்கிழமை (13) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஆரம்பத்திலேயே ஜேக்கப் டஃப்பியிடம் பதும் நிஸங்கவை இழந்தது. எனினும், அதன்பின்னர் ஜோடி சேர்ந்த அவிஷ்க பெர்ணாண்டோவும், குசல் மென்டிஸும் ஓட்டங்களைச் சேகரித்த நிலையில் 100 (115) ஓட்டங்களுடன் இஷ் சோதியிடம் அவிஷ்க வீழ்ந்தார்.

அடுத்த ஓவரிலேயே மிஷெல் பிறேஸ்வெல்லிடம் சதீர சமரவிக்கிரம வீழ்ந்ததுடன், அதிரடியாக ஓட்டங்களைப் பெற்ற குசலும் 143 (128) ஓட்டங்களுடன் டஃப்பியிடம் வீழ்ந்தார். பின்னர் அசலங்க 40 (28) ஓட்டங்களுடன் டஃப்பியிடம் வீழ்ந்ததோடு, 49.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 324 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்ட நிலையில், இலங்கையின் இனிங்ஸ் அத்துடன் முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ன் முறையில் 27 ஓவர்களில் 221 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்துக்கு வில் யங்கும், டிம் றொபின்சனும் ஆரம்பத்தில் ஓட்டங்களைச் சேகரித்தனர்.

எனினும் வேகமாக அவர்களும் ஓட்டங்களைச் சேகரிக்காத நிலையில் றொபின்சன் 35 (36) ஓட்டங்களுடனும், யங் 48 (46) ஓட்டங்களுடனும் தீக்‌ஷனவிடம் வீழ்ந்தனர். தொடர்ந்து ஹென்றி நிக்கொல்ஸ் அடுத்த ஓவரிலேயே அசலங்கவிடம் ஹென்றி நிக்கொல்ஸ் வீழ்ந்தார். அடுத்த ஒரு ஓவர் இடைவெளியில் மார்க் சப்மன், கிளென் பிலிப்ஸ் ஆகியோர் அசலங்க, ஜெஃப்ரி வன்டர்சேயின் அடுத்தடுத்த ஓவர்களில் வீழ்ந்தனர்.

பின்னர் டில்ஷான் மதுஷங்கவிடம் மிற்செல் ஹே வீழ்ந்ததுடன், மிற்செல் சான்ட்னெர் ரண் அவுட்டான நிலையில், நாதன் ஸ்மித் மற்றும் சோதியும் மதுஷங்கவிடம் விழ 27 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களையே பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பிறேஸ்வெல் ஆட்டமிழக்காமல் 34 (32) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக குசல் தெரிவானார்.

## தென்னாபிரிக்காவுக்கு மேலும் போட்டிகளைக் கோரும் கிளாசென்

தம்மை சவாலளிக்கக்கூடிய அணியாக வளர்த்துக் கொள்ளும் பொருட்டு மேலும் இரு தரப்புப் போட்டிகளை தென்னாபிரிக்க வீரர்கள் வேண்டுவதாக அவ்வணியின் சிரேஷ்ட வீரர் ஹெய்ன்றிச் கிளாசென் தெரிவித்துள்ளார்.

இரண்டு டெஸ்ட் தொடர்களை தமதணி விளையாடுவது கவலைக்கிடமானதெனத் குறிப்பிட்ட கிளாசென் இதை வீரர்கள் விரும்பவில்லை எனக் கூறியுள்ளார்.



# தென்னாபிரிக்காவை வென்ற இந்தியா

தென்னாபிரிக்காவுக்கெதிரான நான்கு போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், செஞ்சூரியனில் புதன்கிழமை (13) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

இந்தியா: 219/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: திலக் வர்மா ஆ.இ 107 (56), அபிஷேக் ஷர்மா 50 (25), ரமன்டீப் சிங் 15 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 1/28 [4])

தென்னாபிரிக்கா: 208/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்கோ ஜன்சன் 54 (17), ஹென்றிச் கிளாசென் 41 (22), ஏய்டன் மார்க்ரம் 29 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 1/29 [4])

போட்டியின் நாயகன்: திலக் வர்மா

இரண்டு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



# சனேயைக் கைச்சாத்திட போராடும் யுனைட்டெட், ஆர்சனல்

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான லெரோய் சனேயைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான மன்செஸ்டர் யுனைட்டெட், ஆர்சனல் போராடுவதாகக் கூறப்படுகிறது.

மியூனிச்சுடனான 28 வயதான சனேயுடனான ஒப்பந்தமானது, நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

மியூனிச்சுக்கு முன்னதாக 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்காக சனே விளையாடியிருந்தார் எனபது குறிப்பிடத்தக்கது.



தமிழகம்

நடிகை கஸ்தூரியின்

# முன்பிணை மனு தள்ளுபடி

தெலுங்கு பேசும் பெண்களை அவதூறாகப் பேசிய வழக்கில், நடிகை கஸ்தூரியின் முன்பிணை மனுவை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் பிராமணர்கள் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தெலுங்கு பேசும் மக்களை அவதூறாகப் பேசியதாக நடிகை கஸ்தூரி மீது மதுரை திருநகர் பொலிஸார் பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



இந்த வழக்கில் முன்பிணை கோரி கஸ்தூரி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு வியாழக்கிழமை (14) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கஸ்தூரியின் முன்பிணை மனுவைத் தள்ளுபடி செய்து, நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை 15, நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.